DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 5/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : அந்தோணிராஜ் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 13th June 2025.

**எதிரி ஆஜர்.**

முதல்விசாரணை:

நான் ராமசாமியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் தற்காலிக பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். பட்டியல் சாட்சி பிச்சைமுத்து எனது மாமா. அவர் தற்போது கேரளாவில் வேலை பார்ப்பதாக கேள்விப்பட்டேன். ஆனால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது. ஆஜர் எதிரியை தெரியும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 15.10.2012 ம் தேதி எங்கள் ஊரைச்சேர்ந்த மாரியப்பன் என்பவரின் தாயார் இறந்துவிட்டதால் அவரை அடக்கம் செய்வதற்காக மயானத்திற்கு சென்றிருந்தேன் என்றால் சரியல்ல. மயானத்தில் வைத்து எதிரி பிச்சைமுத்துவை பார்த்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. எதிரி கம்பால் பேச்சிமுத்துவின் நாடியில்அடித்து காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெற்றதாகவும், சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.